DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 54/2020**

Dt. 26.05.2025

**Deposition of LW8 examined as PW7**

| | |
|---|---|
| Name | சங்கர் (SI of Police) |
| Father's/Husband's Name | சாமிதுரை |
| Village | பந்தநல்லூர் காவல் நிலையம் |
| Taluk | |
| Age | 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 26.05.2025

(A1 to A4 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது பந்தநல்லூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பாகசாலை காவல் நிலைத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்த போது 13.10.2019 ம் தேதி சீர்காழி அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இளஞ்செழியன் மனைவி ராஜேஸ்வரி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து நிலைய மனு எண் 218/2019 ஆக பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 19.10.2019ம் தேதி 16.30 மணிக்கு காவல்நிலைய குற்ற எண். 38/2019 இதச பிரிவுகள் 294(b),323,354,506(1) ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு ஆவணங்களை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் ராஜதுரை அவர்களின் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் 13.10.2019 என்ற சொற்றொடர் வேறு பேனாவால் இடைசெருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு நான் Side Initial எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்வாக்குமூலத்தை பதிவுசெய்து 6 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் புகார்வாக்குமூலம் பெறப்பட்டு சமுதாய பதிவேடு எண் வழங்கப்பட்டு விசாரணைக்கு பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 13.10.2019 அன்று அரசு மருத்துவனைக்கு சென்று புகார்வாக்குமூலம் பதிவு செய்து மறுநாள் 14.10.2019 அன்று காலை 8.10 மணியளவில் தான் சமுதாய பதிவேடு எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான். புகார்வாக்குமூலத்திலோ முதல் தகவல்அறிக்கையிலோ 13.10.2019 அன்று எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்ற குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். முதல்விசாரணையில் நிலையம் வந்து நிலைய மனு எண் 218/2019 ஆக பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 19.10.2019ம் தேதி 16.30 மணிக்கு காவல்நிலைய குற்ற எண். 38/2019 இதச பிரிவுகள் 294(b),323,354,506(1) ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக தெரிவித்துள்ளீர்கள், யார்யாரை விசாரணை செய்தீர்கள் என்றால் சம்பவ ஊருக்கு சென்று விசாரணை செய்தேன். புகார்தாரரை விசாரணை செய்தேன் வேறு யாரை விசாரணை செய்தேன் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. புகார்தாரரை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரணை

S. சங்கர்

26/5/25

செய்தீர்கள் என்றால் புகார்வாக்குமூலம் வாங்கும் போது விசாரணை செய்தது மட்டும் தான். அதன் பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்த போது சமுதாய பதிவேடு எண் பதிவு செய்ததாகவும் அதற்கு பின் சம்பவ ஊருக்கு சென்று விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்ற விபரத்தை தெரிவித்தீர்களா என்றால் இல்லை. புகார்வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட குற்றங்கள் அனைத்தும் புலன்கொள்தகு குற்றங்கள் என்றால் அவற்றில் சில குற்றங்கள் மட்டும் புலன்கொள்தகு குற்றங்கள் ஆகும். புலன்கொள்தகு குற்றங்களை பொறுத்து உடனடியாக முதல் தகவல்அறிக்கை பதிவுசெய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு இவ்வழக்கில் உடனடியாக முதல் தகவல்அறிக்கை பதிவுசெய்வில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு எதிர் வழக்கு (Counter case) உள்ளது என்றால் சரிதான். நீங்கள் இவ்வழக்கின் எதிரிகள் கொடுத்த எதிர்வழக்கின் புகார்வாக்குமூலத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யவேண்டும் என்ற காரணத்திற்காக எதிர்தரப்பிடம் பொய்யாக ஒரு புகார்வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் இந்த எதிரிகள் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவ செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

26/5/25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை